STEP TOGETHER

இரகசியமானதும், சுயாதீனமானதுமான உதவிக்கு:

**1800 875 204 – இனை அழையுங்கள் அல்லது STEPTOGETHER.COM.AU** எனும் வலைத்தளத்தினைப் பார்வையிடுங்கள்.

உதவித் தொலைபேசி இணைப்பில் மொழிபெயர்ப்பு சேவை உள்ளது.

**தொடர்பில் இருங்கள்**

- @StepTogetherAU
- @StepTogetherAU
- /company/step-together/

NSW அரசாங்கத்தால் நிதியுதவி அளிக்கப்பட்டு, On The Line – இனால் வழங்கப்படுகிறது.



STEP TOGETHER

# தகவல் மற்றும் ஆதரவுக்கான ஒரு பாதுகாப்பான இடம்

**வன்முறைமிக்க தீவிரவாதப் பாதையிலிருந்து நீங்கள் அறிந்தவர்களைப் பாதுகாருங்கள்.**

**1800 875 204 – இனை அழையுங்கள் அல்லது STEPTOGETHER.COM.AU** எனும் வலைத்தளத்தினைப் பார்வையிடுங்கள்.

Tamil



**தீவிரமான அரசியல், கருத்தியல் அல்லது மத ஆர்வத்துடன் சம்பந்தப்பட்ட தீவிர சமூக-விரோத நடத்தை உள்ளிட்ட, மாற்றங்களை உங்களுடன் நெருக்கமாக உள்ள ஒருவரில் நீங்கள் கண்டிருந்தால், அது அச்சமேற்படுத்தக் கூடியதாகவும், கவலை தரக்கூடியதாகவும் இருக்கலாம்.**

**இந்த மாற்றங்கள் யாவும் கவலையைத் தோற்றுவிக்கக் கூடியவை அல்ல என்றபோதிலும், அவை தங்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ எதிரான வன்முறைக்குரிய ஆரம்பச் சாத்தியப்பாட்டினைக் காட்டுவதாக இருக்கலாம்.**

## எவ்வாறு உங்களால் உதவ முடியும்

ஆரம்பக் கட்ட உதவியானது, வன்முறையுடன் கூடிய நடவடிக்கையில் ஈடுபடுவதன் அபாயத்தைக் குறைப்பதற்கான மிகச் சிறந்த வழியாகும்.

சில வேளைகளில், முடிவு எதையும் மேற்கொள்ளாமல் அக்கறையுடன் வெறுமனே காது கொடுத்து அவதானமாகக் கேட்டாலே போதும். மற்றைய வேளைகளில், சமூகத்தில் உள்ள இதில் உதவக்கூடிய பிறருக்கு நீங்கள் பரிந்துரை செய்ய வேண்டி இருக்கலாம்.

உதவி செய்வதில் பயிற்சி பெற்ற ஒருவருடன் அதைப் பற்றி பேசுவது ஒரு பாரிய முதல் படியாகும்.

## Step Together – இனால் எவ்வாறு உதவ முடியும்

**Step Together** என்பது பயிற்சி பெற்ற உளவளத்துணை ஆலோசகர்கள் பணிபுரியும் ஓர் உதவித் தொலைபேசி இணைப்பு மற்றும் இணையவழிச் சேவையாகும். வன்முறைமிக்க தீவிரவாதப் பாதையை நோக்கிச் செல்லும் ஒருவரைத் தெரிந்திருப்பவர்களுக்கு உதவ, நாங்கள் ஒரு பாதுகாப்பான இடத்தை வழங்குகிறோம்.

## தனிப்பட்டதும், இரகசியமானதுமான ஆலோசனை

பொலிஸ் மற்றும் தேசிய பாதுகாப்பு சேவைகளில் இருந்து நாங்கள் சுயாதீனமானவர்கள். நீங்கள் எங்களுடன் பகிர்ந்து கொள்ளும் எந்த தகவலும் இரகசியமாகப் பேணப்படும்.

**1800 875 204** – இனை அழையுங்கள் அல்லது **steptogether.com.au** எனும் வலைத்தளத்தினைப் பார்வையிடுங்கள்.